# குடிதண்ணீர் இணைப்புப் பெற
**(பதிவுத்தபா-ல் அனுப்பப்படுகிறது)**

அனுப்புநர் நாள்: . . . . . . .

(பெயர் முகவரி)

பெறுநர்

பொது தகவல் அதிகாரி,
. . . . . . . . . . . . . . . . . . . .
. . . . (முகவரி எழுதவும்). .

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 - குடிதண்ணீர் இணைப்புப் பெறுவது தொடர்பாக தகவல்கள் கோருதல் - தொடர்பாக.

பார்வை: குடிதண்ணீர் இணைப்பு கேட்ட விண்ணப்பம் நாள்: . . . . . . . &
பணம் செலுத்திய ரசீது எண்: . . . . . . . . நாள்: . . . . . . .

- - - - - -

தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் நான் கீழே கேட்டுள்ள தகவல்களை வழங்கவும்.

1. அ) தங்கள் நகராட்சி/பஞ்சாயத்து பகுதியில் மொத்தம் எத்தனை குடிநீர் தேக்கத் தொட்டி உள்ளன? ஆ) தங்கள் நகராட்சி/பஞ்சாயத்து பகுதியில் மொத்தம் எவ்வளவு அளவு நீர் தினந்தோறும் சேமித்து வைக்கப் படுகிறது? இ) அவைகள் மூலமாக சராசரியாக ஒரு தனி நபருக்கு எத்தனை -ட்டர் வீதம் அனைத்து மக்களுக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது?

2. அ) தற்போது தங்கள் நகராட்சி/பஞ்சாயத்து பகுதியில் எத்தனை பொது விநியோகக் குழாய்கள் உள்ளன? ஆ) அதன் மூலம் எத்தனை -ட்டர் தண்ணீர் தினம் விநியோகம் செய்யப்படுகிறது?

3. அ) தற்போது தங்கள் நகராட்சி/பஞ்சாயத்து பகுதியில் எத்தனை தனியார் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது?

4) அ) இன்னும் எத்தனை புதிய இணைப்புகள் கொடுக்கின்ற வசதிகள் மற்றும் தண்ணீர் சேமிப்புத்திறன் தற்போது உள்ளது? ஆ) அதை இன்னும் எத்தனை மாதங்களில் அதிகரிக்கக் கூடிய திட்டம் உள்ளது? இ) தற்போது விண்ணப்பித்து எத்தனை நாட்களில் இணைப்பு வழங்கப்படும்?

5) அ) கடைசியாக தங்கள் நகராட்சி/பஞ்சாயத்து பகுதியில் புதிய இணைப்பு யாருக்குக் கொடுக்கப்பட்டது? ஆ) அவர்களின் இணைப்பு எண் மற்றும் முகவரி தெரிவிக்கவும்.

6. அ) இன்றுவரை எத்தனை பேர் குடிநீர் இணைப்பு பெற விண்ணப்பித்து இணைப்பு வழங்கப்படாமல் உள்ளனர்? ஆ) புதிய இணைப்பு வழங்க விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு வைப்புத் தொகை பெறப்படுகிறதா? இ) இல்லை எனில் இனி எப்போது புதிய இணைப்புக்காக வைப்புத் தொகை பெறப்படும்?

7. அ) முறையான அனுமதியின்றி எத்தனை இணைப்புகள் உள்ளன? இணைப்பு வைத்துள்ளவர் பெயர் முகவரி தெரிவிக்கவும். ஆ) அவை இன்னும் எவ்வளவு நாளில் முறைப்படுத்தப்படும்? இ) அவைகளைத் துண்டிக்கும் திட்டம் உள்ளதா?

8. அ) புதிய வீட்டு இணைப்புகள் பெறும் போது, குடிநீர் பகிர்மான குழாயி-ருந்து தனியார் வீட்டுப் பகுதிக்குரிய இணைப்பு குழாயை தகுதிவாய்ந்த பிளம்பர் மூலமாக இணைப்பு பெறுபவர்கள் அமைத்துக் கொள்ளலாமா? ஆ) அது தொடர்பான விதிகளின் நகல்கள் வழங்கவும். இ) அவ்வாறு அமைத்தபின் எத்தனை நாட்களில் இணைப்பு வழங்கப்படும்?

9. அ) நான் பார்வையில் குறிப்பிட்டுள்ள ரசீது வழியாக புதிய இணைப்புக்கும் பகிர்மான குழாயி-ருந்து எனது தனி இணைப்புக்கும் சேர்த்து பணம் கட்டியுள்ளேன். இதுவரை இணைப்பு கொடுப்பதற்கு ஏதாவது தடைகள் இருந்தால் அவைகளைத் தெரிவிக்கவும். ஆ) இன்றுவரை இணைப்பு வழங்கப்படாமல் இருப்பதற்குரிய காரணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4(1)d ன்படி தெரிவிக்கவும். இ) எனது வீட்டு இணைப்பு இன்னும் எத்தனை நாட்களில் வழங்கப்படும்.

10. அ) நான் பணம் கட்டியபின் எத்தனைபேர் குடிநீர் இணைப்புக்காக பணம் கட்டியுள்ளார்கள்? ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு இணைப்பு வழங்கப்பட்டுள்து?

11. இந்த ஆண்டு முழுவதும் இணைப்பு வழங்கப்பட்டுள்ள விவரங்களை பதிவு செய்த பதிவேட்டின் நகல் வழங்கவும். ஈ) மேற்படி பதிவேட்டினை பார்வையிடவும் நகல் பெற்றுக் கொள்ளவும் நேரம், நாள் குறிப்பிட்டு எனக்குத் தெரிவிக்கவும்.

12. தாங்கள் அளிக்கும் தகவல்கள் எனக்கு முழு திருப்தி அளிக்கவில்லை எனில் நான் யாருக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும் என்கிற முழு முகவரியை தெரிவிக்கவும்.

மேற்கண்ட தகவல்களைப் பெற இத்துடன் ரூ.10/-க்கு நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

இப்படிக்கு,

**(மனுதாரர் பெயர் மற்றும் ஒப்பம்)**